*10*

# “மெய்யான யூதர் தயவுசெய்து எழுந்து நிற்பாரா?”

## [2:17-29]

*யூதர்களைப் பற்றிய பவுலின் குற்றச்சாட்டை நாம் தொடர்ந்து படிக்கிறோம். நமது தற்போதைய வசனப்பகுதி ரோமர் 2:17-29 ஆகும். “நிச்சயமாகவே, நீங்கள்* என்னைக் *குறிப்பிட முடியாது!” என்ற பாடத்தில், நாம் 17 முதல் 24 வரையிலான வசனங்களைப் படித்தோம், ஆனால் அதைத் தொடரும் வசனங்களை ஆய்வுசெய்வதற்கு முன்பு நாம் அவ்வசனங்களை மறுகண்ணோட்டமிடுதல் அவசியம்.*

*நமது வசனப்பகுதி முழுவதிலும், ஒரு யூதனை யூதனாக்குவது எது என்பதைப் பவுல் வலியுறுத்தினார். இவ்வசனப்பகுதி பின்வரும் வார்த்தைகளுடன் முடிவடைகிறது:*

> *ஆதலால் புறம்பாக யூதனானவன் யூதனல்ல, புறம்பாக மாம்சத்தில் செய்யப்படும் விருத்தசேதனமும் விருத்தசேதனமல்ல. உள்ளத்திலே யூதனானவனே யூதன்; எழுத்தின்படி உண்டாகாமல், ஆவியின்படி இருதயத்தில் உண்டாகும் விருத்தசேதனமே விருத்தசேதனம்; இப்படிப்பட்டவனுக்குரிய புகழ்ச்சி மனுஷராலே அல்ல, தேவனாலே உண்டாயிருக்கிறது (வசனங்கள் 28, 29).*

*நான், இவ்வசனங்களின் பல்வேறு மொழிபெயர்ப்புகளை வாசிக்கையில், எத்தனை மொழிபெயர்ப்புகள் “மெய்யான யூதன்”* [“real Jew”] (RSV; CEV; AB[1]; TEV; Barclay; LB *ஆகியவற்றில் காணவும்) அல்லது “உண்மையான யூதன்”* (NEB; NCV; Phillips *ஆகியவற்றில் காணவும்) என்ற சொற்றொடரை பயன்படுத்தியுள்ளன என்ற விஷயம் என்னை வந்து மோதியது. எடுத்துக்காட்டாக,* CJB *மொழிபெயர்ப்பானது, 28 மற்றும் 29ம் வசனங்களைப் பின்வருமாறு தரவழைத்துள்ளது:*

> *மெய்யான யூதன் என்பவன் புறம்பாக மாத்திரம் யூதனாக இருப்பதில்லை: உண்மையான விருத்தசேதனம் என்பது, புறம்பானதாகவும் மாம்சரீதியானதாகவும் மாத்திரம்*

இருப்பதில்லை. இதற்கு நேர்மாறாக, *மெய்யான யூதன்* என்பவன் உள்ளாக மாறினவனாக இருக்கிறான்; மற்றும் மெய்யான விருத்தசேதனம் என்பது நேர்ப்பொருளாயிராமல், இருதயத்தில் ஆவிக்கேற்றதாக உள்ளது; எனவே அவனது புகழ்ச்சி மனிதர்களிடமிருந்தல்ல, ஆனால் தேவனிடத்தில் இருந்தே வருகிறது.

*''மெய்யான யூதன்'' என்ற சொற்றொடரைப் பற்றி நான் நினைக்கையில், எனது மனம், ''சத்தியத்தைக் கூறுவதற்கு'' என்று அழைக்கப்பட்டதான, 50களிலிருந்து 60கள் வரையில் ஒலிபரப்பப்பட்ட அமெரிக்கத் தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றை நோக்கிப் பின்சென்றது. தேர்வுக்குழுவுக்கு முன்பாக மூன்று போட்டியாளர்கள் நிற்பர். அவர்களில் முதலாமவர், "எனது பெயர் [இதை நாம் டேவிட் என்று அழைப்போம்], மற்றும் நான் [வழக்கத்திற்கு மாறான அல்லது தனிச்சிறப்பு வாய்ந்த சிலவற்றைச் செய்துள்ளேன்]'' என்று கூறுவார். இரண்டாம் மற்றும் மூன்றாம் நபர்கள், தாங்களும் டேவிட்தான் என்று உரிமைகோருவார்கள். அவர்கள் இருக்கையில் அமர்த்தப்பட்டபின்பு, தேர்வுக்குழுவானது அவர்களிடத்தில் கேள்விகள் கேட்டு அதன்பின்பு யார் உண்மை கூறுகிறார் மற்றும் யார் உண்மையைக் கூறாதவர் என்பதை யூகிக்கும். முடிவில், போட்டியை நடத்துபவர், "மெய்யான டேவிட் தயவுசெய்து எழுந்து நிற்பாரா?" என்று கேட்பார், அப்போது மெய்யான டேவிட் எழுந்து நிற்பார்.*

*கடந்த காலத்தில் இருந்த மூன்று தனிநபர்களைக் கற்பனை செய்துகொள்ளுங்கள். அவர்கள் யாவரும் தனிப்பட்ட வகையில் உடை உடுத்தி பவுலின் நாட்களில் இருந்த யூதர்களுக்குரிய வெளித்தோற்றங்கள் யாவற்றையும் கொண்டுள்ளனர். அவர்களில் முதலாமவர், "நான்தான் மெய்யான யூதன். என்னிடத்தில், மோசேயின் நியாயப்பிரமாணம் உள்ளது" என்று கூறுகிறார். இரண்டாமவர், "நான்தான் மெய்யான யூதன். என்னிடத்தில் மோசேயின் நியாயப்பிரமாணம் உள்ளது, மற்றும் நான் விருத்தசேதனம் செய்யப்பட்டுள்ளேன்" என்று கூறுகிறார். மூன்றாமவர், "நான்தான் மெய்யான யூதன். என்னிடத்தில் மோசேயின் நியாயப்பிரமாணம் உள்ளது, நான் விருத்தசேதனம் செய்யப்பட்டுள்ளேன்* மற்றும் *நான் இருதயத்தில் என்னைத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்துள்ளேன்" என்று கூறுகிறார்.* "மெய்யான யூதன் தயவுசெய்து எழுந்து நிற்பானா?"

## *நியாயப்பிரமாணத்தைக் கொண்டிருத்தல் மாத்திரம் "மெய்யான யூதன்" ஆக்குவதில்லை (2:17-24)*

***மாம்சப்பிரகாரமான இஸ்ரவேல் மக்கள்***

*பெரும்பான்மையான யூதர்கள், தங்களின் யூதத்துவத்தை விளக்கப்படுத்தும் எல்லா விஷயங்களிலும், இரு விஷயங்களைப் பட்டியலின் உச்சத்தில் வைத்திருந்தனர். முதலாவது, தேவன் அவர்களுக்கு*

*மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் கொடுத்திருந்தார் என்ற உண்மை யாகும் (3:1, 2ஐக் காணவும்). நியாயப்பிரமாணத்தைப் பற்றி யூதர்கள் எவ்வாறு உணர்ந்தனர் என்பதை ரோமர் 2:17-24 கூறுகிறது. அவர்கள் "நியாயப்பிரமாணத்தின்மேல்" பற்றுதலாயிருந்தனர் (வசனம் 17). அவர்கள் "நியாயப்பிரமாணத்தினால் உபதேசிக்கப்பட்டிருந்தனர்" (வசனம் 18). அவர்கள், தங்களை "நியாயப்பிரமாணத்தின் அறிவையும் சத்தியத்தையும் காட்டிய சட்டமுடையவர்களென்று" நம்பினர் (வசனம் 20). இவ்விதமாக அவர்கள் "நியாயப்பிரமாணத்தைக் குறித்து" மேன்மை பாராட்டினர் (வசனம் 23).* NCV *வேதாகமத்தில்,* "you brag about having God's law" *என்றுள்ளது.*

*யூதர்கள் செவிவழிக்கதை ஒன்றைக் கொண்டிருந்தனர், அதாவது, தேவன் எழுபது மக்களினங்களிடத்தில் சென்று தமது நியாயப்பிரமா ணத்தை அவர்களுக்கு அளித்தார், ஆனால் அவர்கள் யாவரும் அதை மறுத்துவிட்டனர். கடைசியாக, அவர் இஸ்ரவேல் மக்கள் என்று அழைக்கப்பட்ட ஒரு சிறிய குழுவினிடத்தில் வந்தார். அவர்களுக்கு அவர் நியாயப்பிரமாணத்தை அளித்தபோது, அவர்கள், "நாங்கள் இதை எடுத்துக்கொள்கிறோம்!" என்று கூறினர். இந்தக் கதை முற்றிலும் கற்பனையே, ஆனாலும், இது இஸ்ரவேல் மக்கள் நியாயப்பிரமாணத்தைக் கொண்டிருத்தல் குறித்து எவ்வாறு உணர்ந்தனர் என்பதை விவரிக்கிறது. நியாயப்பிரமாணத்தின் காவலர்களாயிருத்தல் என்பது அவர்களை விசேஷித்தவர்கள் ஆக்கிற்று! (அந்தக்கதையின்படி, அவர்கள் மாத்திரமே நியாயப்பிரமாணத்தினுடைய மதிப்பை உணர்ந்தறியும் அளவுக்கு அறிவுமுனைப்புடையவர்களாக இருந்தனர்!)*

*வருந்தத்தக்க வகையில், சில யூதர்கள் நியாயப்பிரமாணத்தைக் கொண்டிருத்தல் மாத்திரம் போதுமானதென்று நினைத்தனர். அவர்கள் அதைக் கொண்டிருந்தனர், ஆனால் அதைக் கடைப்பிடிக்க (அதற்குக் கீழ்ப்படிய) தவறிவிட்டனர். 13ம் வசனத்தில், பவுல் "நியாயப்பிரமாணத்தைக்* கேட்கிறவர்கள் *தேவனுக்கு முன்பாக நீதிமான்களல்ல, நியாயப்பிரமா ணத்தின்படி* செய்கிறவர்களே *நீதிமான்களாக்கப்படுவார்கள்" என்று கூறினார். இப்போது, 23ம் வசனத்தில், அவர் "நியாயப்பிரமாணத்தைக் குறித்து மேன்மை பாராட்டுகிற நீ நியாயப்பிரமாணத்தை மீறிநடந்து, தேவனைக் கனவீனம்பண்ணலாமா?" என்று கூறினார். இது சொல் லாடல்கள் உள்ள ஒரு கேள்வியாகும், இதன் பதில் இதற்குள் மறைமுகமாய் உணர்த்தப்பட்டுள்ளது: "ஆம், நீ நியாயப்பிரமாணத்தை மீறும்போது தேவனைக் கனவீனம்பண்ணுகிறாய்."*

*நமது கற்பனையான ஒலிபரப்புக் காட்சியில், "மெய்யான யூதர் தயவுசெய்து எழுந்து நிற்பாரா?" என்று நாம் கேட்கும்போது, முதலாம் போட்டியாளர் அமர்ந்தவாறே இருக்கிறார். நியாயப்பிரமாணத்தைக் கொண்டிருத்தல் மாத்திரம் அவரை "மெய்யான யூதராக்க" போதுமான தாக இருப்பதில்லை.*

***ஆவிக்குரிய இஸ்ரவேல் மக்கள்***

*பவுலின் குறிப்புரைகளை சரீரப்பிரகாரமான இஸ்ரவேல் மக்களை*

நோக்கியவையாயிருந்தன, ஆனால் அது நமக்கு நடைமுறைப் பயன்பாடுகளை ஏற்படுத்தத் தகுதியானதாயிருக்கும். 4ம் அதிகாரத்தில், பவுல் ஆபிரகாமின் விசுவாசத்தைக் கொண்டிருப்பவர்கள் - அவர்கள் யூதராயிருப்பினும் அல்லது புறஜாதியாராயிருப்பினும் - ஆபிரகாமின் ஆவிக்குரிய சந்ததியாராய் இருக்கின்றனர் என்று கூறினார் (வசனங்கள் 12, 16; கலாத்தியர் 3:29ஐக் காணவும்). கலாத்தியருக்கு எழுதிய தமது நிருபத்தில், பவுல் கிறிஸ்தவர்களை “தேவனுடைய இஸ்ரவேலர்” என்று குறிப்பிட்டார் (கலாத்தியர் 6:15, 16).

ஆவிக்குரிய இஸ்ரவேல் மக்கள் என்ற வகையில் நாம் இனியும் மோசேயின் நியாயப்பிரமாணத்தினால் கட்டுண்டிருப்பதில்லை (ரோமர் 7:4ஐக் காணவும்), ஆனால் “கிறிஸ்துவின் பிரமாணத்தை” (1 கொரிந்தியர் 9:21), “சுயாதீனப்பிரமாணமாகிய பூரணப்பிரமாணத்தைக்” (யாக்கோபு 1:25) கொண்டிருக்கிறோம். (நமக்கு நியாயப்பிரமாணம் *இல்லை*யென்றால், நாம் பாவிகள் என்று குற்றம் உணர்த்தப்பட இயலாது [ரோமர் 4:15; 5:13ஐக் காணவும்].) குறிப்பாக, தேவன் நமக்குப் போதிக்கவும், நம்மைக்கடிந்துகொள்ளவும், நம்மைத் திருத்தவும், நம்மைப் பயிற்றுவிக்கவும், நம்மைத் தகுதிப்படுத்தவும் (2 தீமோத்தேயு 3:16, 17ஐக் காணவும்) - நமக்கு இயேசுவின் புதிய ஏற்பாட்டை (உடன்படிக்கையை) (எபிரெயர் 9:15-17) கொடுத்துள்ளார். இது எவ்வளவு ஆசீர்வாதமானதாக உள்ளது! ஜான் ஃபாசெட் என்பவர் பின்வருமாறு எழுதினார்,

ஏவுதலினால் தரப்பட்ட
தெய்வீக புத்தகம் எவ்வளவு மதிப்புள்ளது!
என் ஆத்துமாவைப் பரலோகத்திற்கு வழிநடத்த,
அதன் கட்டளைகள் தீபம்போல் பிரகாசிக்கின்றன,
பரிசுத்த தெய்வீக புத்தகம்!
எனது மதிப்பு நிறைந்த பொக்கிஷம்!
என்னை இல்லத்திற்கு வழிநடத்திச் செல்ல,
என் கால்களுக்கு விளக்காக என் பாதைக்கு வெளிச்சமாக உள்ளது.[2]

இருப்பினும், வேதாகமத்தின் கட்டளைகளைக் கண்டுகொள்ளாது இருந்துகொண்டு, வெறுமனே ஒரு வேதாகமத்தைக் கொண்டிருத்தல்[3] என்பது பயனற்றதாக உள்ளது. இது அபத்தமானது என்ற விஷயம் அதைக்காட்டிலும் மோசமானதாக உள்ளது. இது, காட்டில் வழியைத் தொலைத்துவிட்ட ஒரு மனிதன் தான் வைத்திருக்கும் திசைகாட்டு கருவியைக் கண்ணோக்காதிருத்தல் போன்றது ... அல்லது பழக்கமற்ற பிரதேசத்தில் பயணம் செய்யும் ஒரு மனிதன் தனது சட்டைப்பையில் உள்ள அப்பகுதியின் வரைபடத்தை ஒருக்காலும் உற்றுநோக்காதிருத்தல் போன்றது ... அல்லது ஒருவர் தாம் செல்ல வேண்டிய ஊருக்கு வழிகாட்டும் பலகையருகே நின்றுகொண்டு, அந்தப் பலகையை விட்டு நகரமறுத்தல் போன்றது. மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் கொண்டிருத்தல் என்பது மாத்திரம் ஒருவரை மெய்யான யூதராக்குவதில்லை - மற்றும் புதிய

ஏற்பாட்டின் பிரதி ஒன்றைக் கொண்டிருத்தல் என்பது மாத்திரம் ஒருவரை மெய்யான கிறிஸ்தவராக்குவதில்லை.

## விருத்தசேதனம் செய்விக்கப்பட்டிருத்தல் மாத்திரம் "மெய்யான யூதராக்குவதில்லை" (2:25-27)

**மாம்சப்பிரகாரமான இஸ்ரவேல் மக்கள்**

ஒரு யூதனைப் பொறுத்தமட்டில் தனது யூதத்துவத்தை விளக்குவதற்கு அவனுக்கு இரண்டாவது முக்கியமான விஷயமாக இருந்து விருத்தசேதனமாகும். விருத்தசேதனம் என்பது இஸ்ரவேல் மக்களினத்தின் அடையாளத்திற்குரிய விளக்கமாகவும் எல்லா யூத ஆண்களும் செய்துகொள்ள வேண்டியதாகவும் இருந்தது. 2ம் அதிகாரத்தின் எஞ்சியுள்ள பகுதியில் பவுல் விருத்தசேதனம் என்ற பாடக்கருத்தின் பக்கம் திருப்பினார்.

"விருத்தசேதனம்" என்ற வார்த்தை, "வெட்டுதல்" என்பதற்குரிய (*temno*[4] என்ற) வார்த்தையை "சுற்றிலும்" என்பதற்குரிய (*peri* என்ற) வார்த்தையுடன் இணைத்துப் பெற்ற (*peritome* என்ற) கூட்டு வார்த்தையாகும். இது "சுற்றிலும் வெட்டுதல்" என்று நேரடியாக அர்த்தப்படுகிறது.[5] ஆங்கிலத்தில் உள்ள "circumcision" என்ற வார்த்தையானது லத்தீன் மொழியில் இருந்து பெறப்பட்டுள்ளது, இது அதே அர்த்தம் கொண்டுள்ளது (*circum* ["சுற்றிலும்"] கூட்டல் *cise* ["வெட்டுதல்"]). கிரேக்கு மற்றும் ஆங்கிலம் என்ற இருமொழிகளிலும், இவ்வார்த்தை நுனித்தோலை நீக்குவதற்கான அறுவை செயல்முறையைக் குறிக்கிறது (ஆதியாகமம் 17:11; யாத்திராகமம் 4:25 ஆகிய வசனங்களைக் காணவும்).

யூதப்பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளிடத்தில், ஆபிரகாமுடன் தேவன் செய்துகொண்ட உடன்படிக்கையைப் பற்றிக் கூறுவதில் ஒருபோதும் களைப்படைந்ததில்லை:

> பின்னும் தேவன் ஆபிரகாமை நோக்கி: இப்பொழுது நீயும், உனக்குப்பின் தலைமுறை தலைமுறையாக வரும் உன் சந்ததியும், என் உடன்படிக்கையைக் கைக்கொள்ளுங்கள். எனக்கும் உங்களுக்கும், உனக்குப்பின்வரும் உன் சந்ததிக்கும் நடுவே உண்டாகிறதும், நீங்கள் கைக்கொள்ள வேண்டியதுமான என் உடன்படிக்கை என்னவென்றால், உங்களுக்குள் பிறக்கும் சகல ஆண்பிள்ளைகளும் விருத்தசேதனம் பண்ணப்பட வேண்டும். உங்கள் நுனித்தோலின் மாம்சத்தை விருத்தசேதனம் பண்ணக்கடவீர்கள்; அது எனக்கும் உங்களுக்குமுள்ள உடன்படிக்கைக்கு அடையாளமா யிருக்கும். உங்களில் தலைமுறை தலைமுறையாகப் பிறக்கும் ஆண்பிள்ளைகளெல்லாம் எட்டாம்நாளிலே விருத்தசேதனம் பண்ணப்பட வேண்டும்; ... (ஆதியாகமம் 17:9-12).

விருத்தசேதனம் என்பது தேவனுக்கும் ஆபிரகாமுக்கும் இடையிலான

"உடன்படிக்கையின் *அடையாளமாக*" இருந்தது என்பதைக் கவனியுங்கள். ரோமர் 4:11ல், பவுல் ஆபிரகாமைப் பற்றி இதே விதமான மொழிநடையைப் பயன்படுத்தினார்: "அவன் விசுவாசத்தினாலே அடைந்த நீதிக்கு *முத்திரையாக* விருத்தசேதனமாகிய *அடையாளத்தைப்* பெற்றான்."

விருத்தசேதனம் என்பது ஆபிரகாமின் காலத்தில் இருந்தே இஸ்ரவேல் மக்களிடையே வழக்கமாக நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. டக்ளஸ் மூ என்பவரின் கூற்றுப்படி, "மக்காபேயர்களின் புரட்சியின்போது (கி.மு. 166-160) ஏற்பட்ட துன்பம் அதை [விருத்தசேதனத்தை], யூதமக்களின் மத்தியில் தனிச்சிறப்பான ஒரு புதிய மட்டத்திற்கு உயர்த்திற்று."[6] இன்றைய நாட்களில் விருத்தசேதனம் என்பது சில ஆண்குழந்தைகளுக்கு மருத்துவ காரணங்களுக்காகச் செய்யப்படுகிறது; ஆனால் யூதர்களுக்கு, அது காலத்தால் கனப்படுத்தப்பட்டதும் உயர்ந்த பயபக்திக்குரியதுமான மதச்சடங்கானது.[7] விருத்தசேதனம் என்பது [யூத மனிதர் ஒருவரை] "யூதர் என்று குறிப்பிடும் அறுவைச்சிகிச்சைச் சடங்காக" இருக்கிறது, "அது தேவனுக்குரிய மிகவும் நெருங்கிய அடையாளமாக உள்ளது" (2:25; MSG; Phillips). யூதர்கள் தங்களை "விருத்தசேதனம் பண்ணப்பட்டவர்கள்" என்று பெருமையுடன் அழைத்துக்கொண்டனர், மற்றும் அவர்கள் புறஜாதியார்களை "விருத்தசேதனமில்லாதவர்கள்" என்று குறிப்பிட்டனர் (3:30ஐக் காணவும்).

யூதர்களுடைய சிந்தையில் விருத்தசேதனத்தின் முக்கியத்துவமானது, இரபீக்களின் ஏவுதல் பெற்றிராத கூற்றுகளில் காணப்படமுடியும். "விருத்தசேதனம் செய்துகொண்ட யாவரும் இனிவரவிருக்கும் உலகத்தில் பங்கு கொள்வர்"[8]; விருத்தசேதனம் இஸ்ரவேல் மக்களை கெகன்னாவிலிருந்து விடுவிக்கும்"[9]; "விருத்தசேதனம் செய்துகொண்ட யூதர் எவரும் நரகத்தைக் காணமாட்டார்."[10] இந்தக் குறுஞ்சொற்றொடர்கள், தேவனுக்குக் கீழ்ப்படிதல் அல்லது கீழ்ப்படியாதிருத்தல் பற்றிய அக்கறை எதையும் விளக்குவதில்லை; விருத்தசேதனம் செய்யப்பட்டிருத்தல் என்பது கர்த்தருடன் நித்திய ஜீவனில் இருத்தலை உறுதிப்படுத்தப் போதுமானது என்று கருதப்பட்டது.

ரோமர் 2:25-29ல், பவுல் இரபீக்களில் சிலர் போதித்தவற்றிற்கு நேர்மாறானதைக் காண்பித்தார், அதாவது, விருத்தசேதனம் செய்துகொண்டவராக இருத்தல் என்பது மாத்திரம் யூதரை மெய்யான யூதராக்குவதில்லை. அவர், "விருத்தசேதனம் பிரயோசனமுள்ளதுதான் ..." என்று அடுத்ததாகக் கூறினார் (வசனம் 25). தேவன் யூதர்களைக் குறிப்பிட்ட ஆவிக்குரிய அனுகூலங்களுடன் ஆசீர்வதித்திருந்தார் (3:1, 2ஐக் காணவும்). ஒரு யூதனாக இருப்பதற்கு விருத்தசேதனம் இன்றியமையாததாக இருந்ததால் அது மதிப்புடையதாக இருந்தது.

இவ்வசனத்தில் பவுல் "ஆல்" என்ற ஒரு சிறு வார்த்தையைக் கூட்டினார்: "நீ நியாயப்பிரமாணத்தைக்[11] [the Law]கைக்கொண்டு நடந்*தால்*" (2:25). விருத்தசேதனம் என்பது தனக்குள்ளேயே ஒரு முடிவாக இருக்க ஒருக்காலும் நோக்கங்கொண்டிருந்ததில்லை. அது, ஒருவர் தேவனுடைய உடன்படிக்கையின் உறவுக்குள் இருந்தார் என்பதன் அடையாளமாக இருந்தது - ஆனால் அதன்பின்பு, விருத்தசேதனம் செய்யப்பட்ட ஒருவர், உடன்படிக்கையை நிறைவேற்றும் கடமை கொண்டிருந்தார் (கலாத்தியர்

5:3ஐக் காணவும்). யூதர்கள் விருத்தசேதனத்தை கீழ்ப்படிதலுக்குப் *பதிலி யாகப்* பயன்படுத்தியிருந்தனர் என்பது கவலைக்குரியதாகும்.

ஒருவர் விருத்தசேதனம் செய்திருந்தும் "நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடிக்க" தவறியிருந்தால், அவரைப் பற்றிய விஷயம் என்ன? பவுல், "நீ நியாயப்பிரமாணத்தை மீறி நடந்தால் உன் விருத்தசேதனம் விருத்தசேதனமில் லாமையாயிற்றே" என்று கூறினார் (ரோமர் 2:25). இந்த வார்த்தைகள் ஒரு யூதருக்கு எவ்வளவு அதிர்ச்சியளிப்பதாக இருந்திருக்க வேண்டும்: "விருத்தசேதனமில்லாதவர்களில்" ஒருவராவது என்பது நினைத்துப்பார்க்கவும் கூடாததாயிருந்தது! பவுல் இவ்விடத்தில் திரும்பவும் ஒரு அறுவைச்சிகிச்சை செயல்முறை என்பதைக் குறிப்பிடவில்லை. மாறாக, அவர் யூதர்கள் தேவனு டனான தங்களது உடன்படிக்கையை நிறைவேற்றாதிருந்தால், அவர்கள் உடன்படிக்கையின் அடையாளத்தை ஒருக்காலும் பெற்றிராதவர்கள் போல நடந்துகொண்டனர் என்றே அர்த்தப்படுத்தினார்.

ஒருமனிதர் தமது மணவாட்டியுடன் திருமண வாக்குறுதிகளை பரிமாறிக் கொண்டு அதன்பின்பு, அவர் திருமணமே ஆகாதவர் போல நடந்துகொள்வது என்பது வெறுக்கத்தக்கதாக உள்ளது. ஒரு மனிதர், ஒரு ஒப்பந்தத்தை நிறைவேற்ற நோக்கங்கொண்டிராமலேயே அதில் கையொப்பம் இடுதல் என்பது பழித்துரைக்கக்கூடியதாக உள்ளது. இப்படியிருக்க, ஒரு மனிதர் கர்த்தருடன் உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்திவிட்டுப் பின்பு அதைப் புறக்கணித்தல் என்பது எவ்வளவு அதிகம் கனவீனத்திற்கு உரியதாக இருக்கும்!

"விருத்தசேதனம்" உடையவர்கள் "விருத்தசேதனம்" அற்றவர்களாகக் கூடும் என்றால், "விருத்தசேதனம்" அற்றவர்கள் "விருத்தசேதனம்" உடையவர்கள்போலக் கண்ணோக்கப்படும் சாத்தியக்கூறும் இருந்தது. பவுல் தொடர்ந்து, "மேலும் விருத்தசேதனமில்லாதவர்கள் நியாயப்பிரமா ணத்துக்கேற்ற நீதிகளைக் கைக்கொண்டால், அவனுடைய விருத்தசேதனமில் லாமை விருத்தசேதனம் என்றெண்ணப்படுமல்லவா?" என்று கூறினார் (வசனம் 26). "விருத்தசேதனமில்லாதவன்" என்பது "விருத்தசேனமில் லாமை" என்று அர்த்தப்படும் இரு கிரேக்க வார்த்தைகளில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. "விருத்தசேதனமில்லாமை" என்பதற்கான வார்த்தையானது, "விருத்தசேதனம்" என்பதற்கான கிரேக்க வார்த்தையுடன் ஒரு எதிர்மறை முன்குறிச்சொல்லை (*a*) சேர்த்து வடிவமைக்கப்பட்டிருக்கும் என்று நாம் எதிர்பார்க்கலாம். அதற்குப்பதிலாக, "நுனித்தோலைக் கொண்டிருத்தல்"[12] என்று அர்த்தப்படுகிற மாறுபட்ட (*akrobustia* என்ற) கூட்டுவார்த்தையொன்று பயன்படுத்தப்பட்டுள்ளது.

பவுல், விருத்தசேதனமற்ற இத்தனிநபர் "நியாயப்பிரமாணத்துக்கேற்ற நீதிகளை" கடைப்பிடித்தலைப் பற்றிப் பேசினார் (வசனம் 26அ). "கடைப்பிடித்தல்" என்று மொழிபெயர்க்கப்பட்ட (*phulasso* என்ற) வினைச்சொல், "காத்துக்கொள்ளுதல்," "பாதுகாத்தல் என்ற வழியில் காத்துக்கொள்ளுதல்" என்று அர்த்தப்படுகிறது.[13] இவ்விடத்தில், இது நியாயப்பிரமாணம் முறிந்துபோகாமல் அதை "காத்துக்கொள்ளுதல்," வேறு

வார்த்தைகளில் கூறுவதென்றால், அதன் கொள்கைகளைக் கடைப்பிடித்தல் என்று அர்த்தப்படுகிறது.[14] "நீதிகள்" என்பது *dikaiomata* என்பதன் மொழி பெயர்ப்பாக உள்ளது - இது "நீதி" என்று பொருள்படும் வார்த்தைகளின் பலமுகப்புக் குடும்பத்தில் இருந்து வந்ததாக உள்ளது (ஒருவேளை, நீங்கள் இவ்வார்த்தையின் தொடக்கத்தில் உள்ள *dikai* என்பதை உணர்ந்தறிந் திருக்கலாம்). KJV மொழிபெயர்ப்பு, இவ்வார்த்தையை "நீதி" என்று மொழிபெயர்த்துள்ளது; NKJVயில் இது "நீதியினால் அவசியமாகக் கேட்டுக்கொள்ளப்படுபவை" என்றுள்ளது.

ஒரு சிலவசனங்களுக்கு முன்னர், புறஜாதியார் சிலர் "சுபாவமாய் நியாயப்பிரமாணத்தின்படி செய்கிறபோது" என்ற பவுலின் கூற்றை நாம் கண்டோம் (வசனம் 14). அவர்கள் தேவனிடத்திலிருந்து எழுதப்பட்ட பிரமாணம் ஒன்றைக் கொண்டிருந்ததில்லை, ஆனால் அவர்கள், சரி தவறு என்பது பற்றிய ஒரு உணர்வைக் கொண்டிருந்து, மோசேயின் நியாயப்பிர மாணத்தில் காணப்பட்டவைகளுக்கு ஒத்ததான ஒழுக்கக் கொள்கைகளைக் கடைப்பிடித்தனர்.

இப்போது, பவுல் மாம்சப்பிரகாரமான விருத்தசேதனம் தன்னில் போதுமானதாயிருப்பதில்லை என்று நிரூபிக்க அவ்வகையான தனிநபரைப்பற்றிக் குறிப்பிட்டார்: "மேலும் விருத்தசேதனமில்லாதவன் நியாயப்பிரமாணத்திற்கேற்ற நீதிகளைக் கைக்கொண்டால், அவனுடைய விருத்தசேதனமில்லாமை விருத்தசேதனம் என்றெண்ணப்படுமல்லவா?" (வசனம் 26). "என்றெண்ணப்படுமல்லவா" என்பது "எண்ணப்படுதல்" அல்லது "கணக்கிடப்படுதல்" என்று அர்த்தப்படுகிற *logizomai* என்ற வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.[15] (நாம் 4ம் அதிகாரத்தில் இது திறவுகோல் வார்த்தையாக இருப்பதைக் காணப்போகிறோம்.) NCV வேதாகமத்தில், "நியாயப்பிரமாணம் கூறுவதை அவர்கள் செய்தால், அது அவர்கள் விருத்தசேதனம் பெற்றுள்ளவர்கள் என்பது போலாகும்" என்றுள்ளது.

ஜான் R. W. ஸ்டாட் என்பவர், பவுலின் இரட்டை உறுதிப்பாடு பின்வரும் இரண்டு மாதிரிச் சமன்பாடுகளில் விளக்கப்படுத்தப்படலாம் என்று கூறினார்:[16]

> விருத்தசேதனம் - கீழ்ப்படிதல் = விருத்தசேதனமில்லாமை
> விருத்தசேதனமில்லாமை + கீழ்ப்படிதல் = விருத்தசேதனம்

மீண்டுமாக நான், இது ஒரு யூதருக்கு எவ்வளவு அதிர்ச்சியளிக்கும் கருத்தாக இருந்திருக்க வேண்டும்! என்று கூறுகிறேன். இருப்பினும், பவுல் தனது தொந்தரவுசெய்யும் கூற்றுக்களை இத்துடன் முடித்துக் கொள்ளவில்லை.

27ம் வசனம், "சுபாவத்தின்படி[17] விருத்தசேதனமில்லாதவனாயிருந்தும், நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறவனாயிருந்தால்" என்று தொடங்குகிறது (வசனம் 27). இங்கு (*telousa* என்ற) வேறொரு வார்த்தை "நிறைவேற்றுதல்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது *telousa* என்பது *telos* ("முடிவு") என்பதற்கு உறவுவார்த்தையாகும், இது

*"விருப்பமான முடிவுக்குக் கொண்டுவருதல்" என்று அர்த்தப்படுகிறது.*[18] KJV வேதாகமத்தில் "நிறைவேற்றுதல்" என்றுள்ளது. புறஜாதியார் (தாங்கள் பெற்றுக்கொண்டிராத) மோசேயின் நியாயப்பிரமாணத்திற்கு உண்மையில் கீழ்ப்படியவில்லை; ஆனால் அது போன்ற ஒழுக்கங்களின்படி வாழ்ந்ததினால் அவர்கள், நியாயப்பிரமாணத்தின் நோக்கங்களில் ஒன்றை நிறைவேற்றினர்.

நியாயப்பிரமாணத்தைக் கைக்கொண்ட புறஜாதியார்களைப் பற்றிப் பவுல், "வேத எழுத்தும்[19] விருத்தசேதனமும் உள்ளவனாயிருந்தும், நியாயப்பிரமாணத்தை மீறுகிற உன்னைக் குற்றப்படுத்துவானல்லவா?" என்று கூறினார் (வசனம் 27ஆ). இங்கு இன்னொரு திகைப்பு இருந்தது! யூதர்கள் தங்களைத் தாங்களே, புறஜாதியாருக்கு நியாயாதிபதிகளாயிருக்கத் தகுதியானவர்கள் என்று நினைத்தனர் (2:1, 3ஐக் காணவும்), ஆனால், பவுல், சரியானவற்றைச் செய்த புறஜாதியார், தவறானவற்றைச் செய்த யூதர்கள் நியாயந்தீர்ப்பார்கள் (*krino*) என்று கூறினார்! "இங்கு குறிப்பிடப்பட்ட நியாயந்தீர்த்தல் என்பது ... ஒப்பிடுதலின் மறைமுகமான நியாயந்தீர்த்தலாக உள்ளது"[20] (நினிவேயின் மக்கள் இயேசுவைப் புறக்கணித்தவர்களை "நியாயந்தீர்த்தல்" போன்றதாக உள்ளது [மத்தேயு 12:41]).

எழுதப்பட்ட சட்டம் இல்லாத புறஜாதியார், அதன் விதிகளைக் கடைப்பிடிக்க முடிந்தது என்றால், எழுதப்பட்ட சட்டத்தைக் கொண்டிருந்த யூதர்களும் நிச்சயமாக அதையே செய்திருக்க முடிய வேண்டும்! கொடுக்கப்பட்ட ஒரு வேலையைப்பற்றி, "அது மிகவும் கடினமானதாக உள்ளது" என்று முறையிட்ட ஒரு இளம்வயதுப் பையனைப்பற்றியும் - அவனது தந்தை அதற்கு, "அங்குள்ள இளம் பையனைப் பார், அவன் உன்னில் பாதியளவே இருக்கிறான், அவன் அதைச் செய்கிறான்!" என்று பதில்கொடுப்பது பற்றியும் - நான் நினைவுகூருகிறேன். எவ்வளவு சங்கடம்!

25 முதல் 29 வரை உள்ள வசனங்களின் அடிப்படையிலான சில தவறான வாதங்களைத் திருத்த நான் சற்றே தாமதிப்பது அவசியமாக உள்ளது. இந்த வசனங்களில், விருத்தசேதனம் விளைவு எதையும் ஏற்படுத்தாததாக இருந்தது, ஒருவர் விருத்தசேதனம் பண்ணப்பட்டாரா இல்லையா என்பது எவ்வித வேறுபாட்டையும் ஏற்படுத்தவில்லை என்று போதிப்பதே பவுலின் நோக்கமாயிருந்தது என்று சில எழுத்தாளர்கள் வலியுறுத்துகின்றனர். இன்றைய நாட்களில் விருத்தசேதனம் என்பது ஆவிக்குரிய வகையில் எவ்விதத் தனிச்சிறப்பையும் கொண்டிருப்பதில்லை என்பது உண்மையே (1 கொரிந்தியர் 7:19; கலாத்தியர் 5:6; 6:15), ஆனால் யூதர்களுக்கும் புறஜாதியார்களுக்குமான தேவனுடைய இந்த ஏற்பாடு கிறிஸ்துவின் வருகைக்கு முந்தியதாக இருந்தது என்ற பவுலின் குறிப்புரைகளைச் சிந்தையில் காத்துகொள்ளுங்கள். அந்த ஏற்பாடுகளின்கீழ், ஒரு புறஜாதியார் விருத்தசேதனம் செய்துகொள்ளுதல் என்பது முக்கியமானதாக இருக்கவில்லை, ஆனால் ஒரு யூத ஆண் விருத்தசேதனம் செய்துகொள்ளுதல் என்பது முக்கியமானதாக இருந்தது. ஒரு யூத ஆண் விருத்தசேதனம் செய்துகொள்ளாதிருந்தால், அவர்

*பஸ்காவை ஆசரிக்க முடியாது (யாத்திராகமம் 12:48ஐக் காணவும்) அல்லது அவர் தேவாலயத்திற்குள் பிரவேசிக்க முடியாது (எசேக்கியேல் 44:9ஐக் காணவும்); அவர் "தமது ஜனத்தினின்று அறுப்புண்டு போவார்" (ஆதியா கமம் 17:14).* மோசஸ் E. லேர்டு என்பவர் பின்வருமாறு எழுதினார்,

> *... ஒரு யூதர் விருத்தசேதனமின்றி இருப்பதற்கும் ஒரு புறஜாதியார் விருத்தசேதனமின்றி இருப்பதற்கும் உள்ள வேறுபாட்டை நாம் இங்கு காணாமலிருக்கக்கூடாது. அவ்விஷயத்தில் ஒரு யூதர் உடன்படிக்கையை முறித்தார், ஆனால் புறஜாதியார் அப்படியிருக்கவில்லை. ஆனால் ஒரு யூதர் விருத்தசேதனம் பெற்றபின்பு, அவர் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளவில்லை என்றால், அவரது விருத்தசேதனம் ஒன்றுமற்ற தானது.*[21]

*பவுலின் போதனை பின்வருமாறு விளக்கியுரைக்கப்படலாம்: உடன்படிக்கையின் "அடையாளம்" இன்றி உடன்படிக்கையைக் கைக் கொண்டவர், உடன்படிக்கையின் "அடையாளத்தை" கொண்டிருந்தும் அதைக் கைக்கொள்ளாது இருப்பவரைக் காட்டிலும் ஆவிக்குரிய நிலையில் மேன்மையானவராக இருந்தார். இந்த சத்தியத்திற்கு வேதாகமரீதி யான விவரிப்பு ஒன்றைக் கொண்டிருத்தல் உதவிகரமாயிருக்குமா? விருத்தசேதனத்தின் ''அடையாளத்தை'' கொண்டிராத புறஜாதிப் போர்வீரரான கொர்நேலியுவைப் பற்றிச் சிந்தித்துப்பாருங்கள் (நடபடிகள் 10:1, 2). இவரது பண்பை, விருத்தசேதனத்தின் "அடையாளத்தைக்" கொண்டிருந்த, யூதர்களுடைய பிரதான ஆசாரியனான காய்பா என்பவனது பண்புடன் நேரெதிராக ஒப்பிட்டுப் பாருங்கள் (மத்தேயு 26:3, 4, 57, 62-68).*

*மீண்டும் ஒருமுறை, நாம் நமது கற்பனையான தொலைக்காட்சித் தொடருக்குத் திரும்புகிறோம். நிகழ்ச்சியை நடத்துபவர், "மெய்யான யூதர் தயவுசெய்து எழுந்து நிற்பாரா?" என்று கேட்கும்போது, இரண்டாமவர் ("நான் தான் மெய்யான யூதன். என்னிடத்தில் மோசேயின் நியாயப்பிர மாணம் உள்ளது, மற்றும் நான் விருத்தசேதனம் செய்யப்பட்டுள்ளேன்" என்று கூறியவர்)கூட அமர்ந்த நிலையிலேயே இருக்கிறார். நியாயப்பிர மாணத்தைக் கொண்டிருந்து, விருத்தசேதனம் செய்துகொண்டநிலையில் இருத்தலும்கூட ஒருவரை மெய்யான யூதராக்குவதில்லை.*

**ஆவிக்குரிய இஸ்ரவேல் மக்கள்**

*மீண்டுமாக, ஆவிக்குரிய இஸ்ரவேல் மக்கள் என்ற வகையில், நாம் யூதர்களுக்குப் பவுல் கூறிய வார்த்தைகளில் இருந்து கற்றுக்கொள்ள முடியும். குறிப்பிட்ட சில சடங்குகளை நிகழ்த்துதல் என்பது தேவனுடன் சரியான நிலையில் நிற்குதலை உத்தரவாதப்படுத்திற்று என்று யூதர் நினைத்தார். நியாயப்பிரமா ணத்தைக் கொண்டிருத்தல் என்பது மதிப்புள்ளதாக இருந்ததா? ஆம், அவ்வாறே இருந்தது (ரோமர் 3:1, 3ஐக் காணவும்). யூத ஆண்கள் விருத்தசேதனம் செய்விக்கப்பட வேண்டுமா? நிச்சயமாக. இவ்விரண்டும் இல்லாவிட்டால் அவர் யூதராயிருக்கமாட்டார். இருப்பினும்,*

*நியாயப்பிரமாணத்தைக் கொண்டிருத்தலும் விருத்தசேதனம் செய்விக்கப்பட்டிருத்தலும் தேவனுக்குக் கீழ்ப்படிதலுக்குப் பதிலியாக இருக்க முடியுமா? ஒருபோதும் இல்லை!*

*நம்மில், புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவத்தை மீளக்கட்டுவதற்குத் தங்களை அர்ப்பணித்துக்கொண்டவர்கள், பொறுப்புள்ள தனிநபர்களைப் பாவமன்னிப்புக்காக முழுக்காட்டுதல் மூலம் ஞானஸ்நானப்படுத்துகின்றனர். நாம் ஒவ்வொரு வாரத்தின் முதல்நாளிலும் கர்த்தருடைய பந்தியில் பங்கேற்கிறோம். தேவனை நாம் ஆராதித்தலில், இசைக்கருவிகளின் இசையில்லாது நாம் பாடல்களைப் பாடுகிறோம். இவையாவும் முக்கியமானவைகளாக உள்ளனவா? ஆம், முக்கியமான வைகளே. நாம் கர்த்தருடைய சபை என்று உரிமைகோரிக்கொண்டு, வேறெவ்வாறு செய்ய முடியும்? இருப்பினும், இவைகள் கர்த்தருடைய பின்வருவனபோன்ற கட்டளைகளுக்குக் கீழ்ப்படிதலுக்குப் பதிலிகளாக முடியுமா?*

> *பிரியமானவர்களே, ஒருவரிலொருவர் அன்பாயிருக்கக் கடவோம் (1 யோவான் 4:7).*
>
> *ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும் … நன்மைசெய்யக்கடவோம் (கலாத்தியர் 6:10).*
>
> *ஒருவருக்கொருவர் தயவாயும் மன உருக்கமாயும் இருந்து, … ஒருவருக்கொருவர் மன்னியுங்கள் (எபேசியர் 4:32).*
>
> *கூடுமானால் உங்களாலானமட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமா யிருங்கள் (ரோமர் 12:18).*
>
> *"ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய் சகலஜாதிகளையும் சீஷராக்கி" (மத்தேயு 28:19).*

*ஒருக்காலும் இல்லை! "ஒரு மெய்யான கிறிஸ்தவராக" இருப்பதற்கு ஒருவர், கர்த்தர் கட்டளையிட்டுள்ள எல்லாவற்றையும் செய்தல் குறித்து மும்முரமாயிருக்க வேண்டும்.*

## இருதயத்தில் தேவனுக்கு ஒப்புக்கொடுத்தலே "மெய்யான யூதன்" ஆக்கிற்று *(2:28, 29)*

*பவுலின் அடிப்படைவாதக் கூற்றுகள், பல யூதர்கள், "ஒரு யூதர்" என்பதற்கு மறுவிளக்கம் என்று கருதும் விஷயத்திற்கு வழிநடத்தின. ரோமர் 2:28ம் வசனம், "ஆதலால் புறம்பாக யூதனானவன் யூதனல்ல" என்று தொடங்குகிறது (வசனம் 28அ). "புறம்பாக" என்பது "வெளியில்" - அதாவது காணக்கூடிய வகையில் என்று அர்த்தப்படுகிற மூன்று வார்த்தைகளில் (en to*

*phaneo* ) மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. AB வேதாகமத்தில், ''outwardly and publicly'' என்றுள்ளது, மெக்கார்டு மொழிபெயர்ப்பில் இது ''visible'' என்றுள்ளது. இது ஒவ்வொரு யூதருக்கும் பிரியமான வெளிப்படையான செயல்விளக்கங்களான சடங்குகள் மற்றும் சடங்காச்சாரங்களைக் குறிப்பதாக உள்ளது. "புறம்பாக மாம்சத்தில் செய்யப்படும் விருத்தசேதனமும் விருத்தசேதனமல்ல''[22] (வசனம் 28ஆ). "புறம்பாக" என்பது "வெளியில்" என்று அர்த்தப்படுகிற அதே கிரேக்க வார்த்தைகளில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. "புறம்பாக மாம்சத்தில்" என்பதற்குப் பதில் NIV வேதாகமத்தில் ''outward and physical'' என்றுள்ளது.

புறம்பான செயல்விளக்கங்கள் ஒரு யூதரை யூதராக்குவதில்லை என்றால், பின்பு எது அவரை யூதராக்கிற்று? பவுல், "உள்ளத்திலே யூதனானவனே யூதன் ..." (வசனம் 29அ) என்று கூறினார். "உள்ளத்திலே" என்பதும் (*en to krupto* என்ற) மூன்று வார்த்தைகளிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது; இவ்வார்த்தைகள் "அந்தரங்கத்தில்" - அதாவது காணமுடியாதவற்றில் - என்று அர்த்தப்படுகிறது.[23] மெக்கார்டு மொழிபெயர்ப்பில் ''invisible'' என்றுள்ளது.

தொடர்ந்து பவுல், "இருதயத்தில் உண்டாகும் விருத்தசேதனமே விருத்தசேதனம்'' என்று கூறினார் (வசனம் 29). இந்த உறுதிக்கூற்று, யூதர்கள் ஒருக்காலும் கேட்டிராத விஷயமாயிருந்தது. பழைய ஏற்பாட்டின் எழுத்தாளர்கள், ''இருதயங்களில் விருத்தசேதனம்'' செய்யப்பட்டிருத்தலின் முக்கியத்தத்துவம் பற்றி வலியுறுத்தியிருந்தனர் (உபாகமம் 30:6; லேவியராகமம் 26:41; எரேமியா 9:25, 26; எசேக்கியேல் 44:7, 9 ஆகியவற்றைக் காணவும்). மோசே இஸ்ரவேல் மக்களுக்கு, "ஆகையால் நீங்கள் இனி உங்கள் பிடரியைக் கடினப்படுத்தாமல், உங்கள் இருதயத்தின் நுனித்தோலை விருத்தசேதனம் பண்ணுங்கள்'' என்று கட்டளையிட்டிருந்தார் (உபாகமம் 10:16). எரேமியா தேவனிடத்தில் இருந்து பின்வரும் செய்தியை விடுத்தார். "யூதா மனுஷரே, எருசலேமின் குடிகளே, உங்கள் கிரியைகளுடைய பொல்லாப்பினிமித்தம் என் உக்கிரம் அக்கினியைப்போல எழும்பி, அவிப்பார் இல்லாமல் எரியாதபடிக்கு நீங்கள் கர்த்தருக்கென்று உங்களை விருத்தசேதனம்பண்ணி, உங்கள் இருதயத்தின் நுனித்தோலை நீக்கிப்போடுங்கள்" (எரேமியா 4:4).

மாம்சப்பிரகாரமான விருத்தசேதனம் என்பது, நுனித்தோலை நீக்குவதற்காக ''சுற்றிலும் வெட்டுதலாக'' இருந்தது. ஆவிக்குரிய விருத்தசேதனம் என்பது, ஒரு மனிதர் தமது கர்த்தரைக் கனப்படுத்துதலுக்குத் தம்மை ஒப்புக்கொடுப்பதற்காக துன்மார்க்கத்தையும் கலகத்தையும் ''வெட்டி வெளியே'' எறிதலாக - அவற்றை இருதயத்தில் இருந்து நீக்கிப்போடுதலாக - இருந்தது. மாம்சப்பிரகாரமான விருத்தசேதனம், பௌதீகரீதியான அறுவைச்சிகிச்சையை உள்ளடக்கியிருந்தது, இருதயத்தில் செய்யப்படும் விருத்தசேதனமோ ''ஆவிக்குரிய அறுவைச்சிகிச்சை'' தேவைப்பட்டதாக இருந்தது.

இருதயத்தில் செய்யப்படும் இந்த "விருத்தசேதனம் எழுத்தின்படி உண்டாகாமல், ஆவியின்படி இருதயத்தில் உண்டாவதாக'' இருந்தது

*(ரோமர் 2:29). "எழுத்து" என்பது வசனம் 27ல் "வேத எழுத்து" என்பதைக் குறிப்பிட்ட வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.* NIV *வேதாகமம் இவ்விடத்தில் மீண்டும்* "written code" *என்று குறிப்பிடுகிறது. இந்த சந்தர்ப்பப்பொருளில், இது மோசேயினுடைய நியாயப்பிரமா ணத்தைக் குறிக்கிறது.*

*"எழுத்து" என்பது "ஆவி"* (*pneuma*[24]) *உடன் நேரெதிராக ஒப்பிடப் படுகிறது. "ஆவி" என்பதற்கான ஆங்கில வார்த்தையான* "spirit" *என்பது இவ்விடத்தில் பெரிய* "S" *கொண்டிருக்க வேண்டுமா அல்லது சிறிய* "s" *உடன் உச்சரிக்கப்பட வேண்டுமா என்பதில் வழக்கமான நிச்சயமற்றதன்மை நிலவுகிறது. சில மொழிபெயர்ப்புகளில் இது ஒருவாறும், மற்றவற்றில் இன்னொருவாறும் உச்சரிக்கப்பட்டுள்ளது. குழப்பமானது,* KJV *மற்றும் அதைத் தொடர்ந்து வந்த மொழிபெயர்ப்புகளில் விவரிக்கப்பட்டுள்ளது:* KJV *வேதாகமத்தில்* "spirit" *என்றுள்ளது,* NKJV *வேதாகமத்தில்* "Spirit" *என்றுள்ளது.*

*இவ்வார்த்தை சிறிய* "s" *உடன் தொடங்க வேண்டுமென்றால்,* RSV *வேதாகமம் அனேகமாக சரியான கருத்தைக் கொண்டுள்ளது: "மெய் யான விருத்தசேதனம் என்பது இருதயத்தைப் பொருத்த விஷயமாக, ஆவிக்குரியதாக உள்ளது, அது நேரடியானதல்ல [அதாவது, மாம்சத்தில் நேரடியான அர்த்தத்தில் வெட்டுதல் என்பதாயிருப்பதில்லை]."*

*இவ்வார்த்தை பெரிய* "S" *உடன் உச்சரிக்கப்பட வேண்டும் என்றால், பவுல் அனேகமாக, இருதய விருத்தசேதனம் என்பது மனிதச்செயல்முறையல்ல ஆனால் தேவனுடைய செயல்முறையாக இருந்தது என்று வலியுறுத்தி யிருக்க வேண்டும். (ஒரு யூதருக்கு, "ஆவியினாலே" என்பது "தேவனுடைய ஆவியினாலே" என்று அர்த்தமாயிருக்கும். பரிசுத்த ஆவியானவர் தனிப்பட்ட தெய்வீக நபராக அறியப்படுதல் என்பது புதிய ஏற்பாட்டு உபதேசமாக உள்ளது, இது பழைய ஏற்பாட்டு உபதேசமாக இருப்பதில்லை.)*[25] *யூஜீன் பீட்டர்ஸன் என்பவர் இதைப் பின்வருமாறு விளக்கினார்: "உங்களை யூதராக்குதல் என்பதற்கு, இது உங்கள் தோலில் ஒரு கத்தியின் குறியீடாக இன்றி, உங்கள் இருதயத்தில் தேவனுடைய குறியீடாக உள்ளது"* (MSG).

*லியோன் மோரீஸ் என்பவர், "ஆவி"* ("spirit") *என்பது பெரிய* "S" *உடனோ அல்லது சிறிய* "s" *உடனோ, எப்படி உச்சரிக்கப்பட்டாலும், அது நல்லதொரு கருத்தறிவையே தருகிறது என்று குறிப்பிட்டார். "எந்த வகையிலும் பவுல், கருத்தைத் தவறவிடுகிறதான புறம்பான தேவைகளுக்கு அற்பமான உறுதிப்பாடே இருக்க முடியும் என்ற கருத்தை ஏற்படுத்து கிறார்."*[26] *யூதராக இருக்கும் ஒரு மனிதர் மாம்சத்தில் விருத்தசேதனம் செய்யப்பட்டிருந்தும், அவரது இருதயம் தொடப்படாதிருக்குமென்றால், அவரது விருத்தசேதனம் மதிப்பற்றதாக இருந்தது.*

*பவுல், "இப்படிப்பட்டவனுக்குரிய புகழ்ச்சி மனுஷராலே அல்ல, தேவனாலே உண்டாயிருக்கிறது" என்று முடித்தார் (வசனம் 29ஈ). மனிதர்கள் தாங்கள் காணமுடிபவற்றைப் புகழ்கின்றனர், ஆனால் தேவனோ, காண முடியாதவற்றைப் புகழ்கிறார்: இருதய விருத்தசேதனம் (1 சாமுவேல் 16:7). கர்த்தரிடத்தில் அன்புகூருகிறவர்கள் தங்கள் வாழ்வை, "மனுஷருடைய*

*அங்கீகாரத்திற்காக அல்ல, ஆனால் தேவனுடைய அங்கீகாரத்திற்காகவே" வாழ்கின்றனர் (ரோமர் 2:29;* Phillips).

*29ம் வசனத்தின் முடிவில் பவுல், வார்த்தைகளின்மீதான ஒரு விளையாட்டைப் பயன்படுத்தினாரென்று சிலர் நினைக்கின்றனர். "யூதன்" என்ற குறிப்புப்பெயரானது, "துதி" என்ற கருத்தைத் தூண்டுகிறதான "யூதா" என்பதில் இருந்து தரவழைக்கப்பட்டது (ஆதியாகமம் 29:35; 49:8ஐக் காணவும்). ஆகவே ஒரு "யூதர்" என்பவர் "துதிக்கப்படும் ஒருவர்" என்று நினைக்கப்பட வேண்டும். இருப்பினும், "துதிக்கப்பட்ட ஒருவரின்" இருதயம் விருத்தசேதனம் செய்யப்படாத வரையில், அவர் மனிதருடைய புகழ்ச்சியை மாத்திரமே பெறுவாரே ஒழிய, தேவனுடைய புகழ்ச்சியைப் பெறுவதில்லை.*

*நாம், நமது கற்பனையான தொலைக்காட்சி நிகழ்ச்சிக்குத் திரும்பு கிறோம்: "மெய்யான யூதர் தயவுசெய்து எழுந்து நிற்பாரா?" "நான் தான் மெய்யான யூதன். என்னிடத்தில் மோசேயின் நியாயப்பிரமாணம் உள்ளது, நான் விருத்தசேதனம் செய்யப்பட்டுள்ளேன், மற்றும் நான் இருதயத்தில் என்னைத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்துள்ளேன்" என்று கூறியவர் புன்னகை செய்து தமது இருக்கையில் இருந்து எழுந்து நிற்கிறார். பவுலைப் பொறுத்தமட்டில், இதுவே மெய்யான யூதராயிருந்த யூதரின் வகையாயிருந்தது.*

**ஆவிக்குரிய இஸ்ரவேல்**

*மக்கள் ரோமர் 2:28, 29ன் வார்த்தைகளைப் பவுல் எழுதியபோது, அவர், மாம்சப்பிரகாரமான யூதர்களையே முதன்மையாகத் தமது சிந்தையில் கொண்டிருந்தார். செயல்விளைவில் அவர், "நீங்கள் உங்களை யூதர் என்று அழைத்துக்கொள்ளலாம், ஆனால் நீங்கள் உள்ளாகவும் புறம்பாகவும் யூதராக இல்லாதவரையில், நீங்கள் மெய்யான யூதராக இருப்பதில்லை" என்று கூறினார். இருப்பினும், அவர் இந்த நிருபத்தின் பிந்திய பகுதியில் உள்ள, கிறிஸ்தவர்கள் ஆவிக்குரிய வகையில் ஆபிரகாமுடைய சந்ததி யாராக உள்ளனர் என்ற போதனையை முன்னெதிர்நோக்கியிருக்கச் சாத்தியக்கூறுள்ளது (4:12, 16ஐக் காணவும்). எடுத்துக்காட்டாக, 29ம் வசனத்தில் உள்ள "ஆவி" என்ற வார்த்தை, பரிசுத்த ஆவியானவரைக் குறிக்கிறது என்றால், இது யூதர்களைக் காட்டிலும் கிறிஸ்தவர்களுக்கு அதிகம் அர்த்தப்படுவதாக இருக்கும். மற்றும் பிந்திய எழுத்தொன்றில் பவுல், கிறிஸ்தவர்களை "மெய்யான விருத்தசேதனமுள்ளவர்கள்" என்று குறிப்பிட்டார் என்பதை நாம் அறிகிறோம் (பிலிப்பியர் 3:3; கொலோசெயர் 2:11ஐக் காணவும்).[27]*

*பவுல், ஆவிக்குரிய இஸ்ரவேல் மக்கள் இவ்விடத்தில் தமது சிந்தையில் கொண்டிருந்தாலும் இல்லையென்றாலும், அவர் மாம்சப்பிரகாரமான இஸ்ரவேல் மக்களுக்குப் போதித்த இந்தப்பாடத்தை, நம்மில் கிறிஸ்தவர் களாக உள்ளவர்கள் கற்றறிய வேண்டியது அவசியமாக உள்ளது: புறம்பான வடிவமைப்புகளைக் கைக்கொள்ளுதல் போதுமானதல்ல; இருதயத்தில் சில விஷயங்கள் நடைபெற வேண்டியதாக உள்ளது. எடுத்துக்காட்டாக,*

ஒரு நபர் தண்ணீரில் முழுக்காட்டப்பட்டிருக்கலாம்; ஆனால் அவர் [தமது] "இருதயத்தில் இருந்து" கீழ்ப்படியாதவராக இருந்தால் (ரோமர் 6:17, 18; வசனங்கள் 3, 4ஐக் காணவும்), அவர் நனைகிறார் என்பது மாத்திரமே நடைபெறும் எல்லாமுமாக இருக்கும். ஒரு தனிநபர் - புளிப்பில் லாத அப்பத்தை உண்டு திராட்சரசத்தைப் பருகுதல்மூலமாக - கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கேற்கலாம் - ஆனால் அந்த நினைவுச்சின்னங்களின் அர்த்தத்தின்மீது அவர் கவனம்குவிக்காத வரையில், அவர் "தமக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜனபானம் பண்ணுகிறார்" (1 கொரிந்தியர் 11:29; வசனங்கள் 23-30ஐக் காணவும்). ஒரு நபர், இசைக்கருவிகளின் இசையின்றி கீர்த்தனைகளைப் பாடலாம்; ஆனால் அவர் "ஆவியோடும் ... கருத்தோடும்" பாடத்தவறுகிறார் என்றால் (1 கொரிந்தியர் 14:15), அவர் கூச்சலை மாத்திரமே எழுப்புகிறார். ஒருவர் பேச்சுத்திறனுடன் பேசலாம், ஊக்கத்துடன் ஊழியம் செய்யலாம், தியாகம் நிறைந்த வகையில் கொடுக்கலாம்; ஆனால் இவற்றை அவர் தமது இருதயத்தில் அன்பு இல்லாமல் செய்கிறார் என்றால், அது அவருக்கு எந்தப்பயனும் அளிக்காது (1 கொரிந்தியர் 13:1-3). "மெய்யான கிறிஸ்தவர்களாக" இருப்பதற்கு, நாம் *சரியான விஷயங்களைச்* செய்தால் மாத்திரம் போதாது, அவற்றைச் *சரியான வழியிலும்* செய்யவேண்டும் - அதாவது, நாம் அவற்றை நமது இருதயத்தில் இருந்து செய்ய வேண்டும்.

"மாத்திரம்" மற்றும் "உம்" என்று நான் கூறியதைக் கவனியுங்கள். தேவனைப் பிரியப்படுத்த, புறம்பான மற்றும் உள்ளான விஷயங்கள் சரியானவையாக இருக்க வேண்டும். ஒருவர் "புறம்பாக" சரியானவராக இருக்கிறாரா இல்லையா என்பது முக்கியமற்றது; "உள்ளானதே" முக்கியமானது என்று போதிக்கச் சிலர் ரோமர் 2:28, 29ஐத் தவறாகப் பயன்படுத்துகின்றனர். எடுத்துக்காட்டாக, ரோமர் 2:28, 29ன் முதன்மைச் செய்தியாக இருப்பது "எழுத்து எதிர். ஆவி" என்பதேயாகும் என்று சிலர் வலியுறுத்துகின்றனர். இவர்கள், "வேத எழுத்து" (வேதாகமம் உண்மையில் கூறுவது என்ன என்பது) விளைவு எதையும் கொண்டிருப்பதில்லை என்றும் "ஆவியின் பிரமாணமே" (சரியான நோக்கங்களைக் கொண்டிருத்தல் என்பதே) முக்கியமானது என்றும் முடிவுசெய்கின்றனர். பழைய ஏற்பாட்டினுடைய அமைப்பின்கீழ் ஒருவர் யூதராயிருந்தாலும் இராவிட்டாலும், விருத்தசேதனம் செய்யப்படுதல் என்பது "விளைவெதுவும் அற்றது" என்று பவுல் போதித்தாரா? இல்லை! ஒரு யூத ஆண் விருத்தசேதனம் செய்யப்பட வேண்டும் என்பது *புரிந்துகொள்ளப்பட்டிருந்தது*. மாம்சத்தில் செய்யப்படுகிற விருத்தசேதனம் மாத்திரம்போதுமானதல்ல; ஒரு யூதருக்கு இருதயத்தில் விருத்தசேதனமும் அவசியமாக இருந்தது என்று வலியுறுத்துவதே பவுலின் நோக்கமாயிருந்தது.

தேவனுடைய திட்டத்தில் ஞானஸ்நானம் கொண்டுள்ள இடம் பற்றிய வேதாகம போதனைகளைத் தாக்குவதற்கு சிலர் ரோமர் 2:28, 29ஐப் பயன்படுத்துகின்றனர். இவ்வசனப்பகுதியில் ஞானஸ்நானம் பற்றிக் குறிப்பிடப்படுவதில்லை என்பதால், அப்படிப்பட்ட பயன்பாடு தானாகவே சந்தேகத்திற்குரியதாக உள்ளது. கொடுக்கப்படும் ஒரு

*தலைப்பு பற்றி வேதாகமம் என்ன போதிக்கிறது என்று நீங்கள் கண்டறிய விரும்பினால், அப்பாடக்கருத்தைக் குறிப்பிடாத வசனப்பகுதிகளுக்கல்ல ஆனால் அதைக்குறிப்பிடும் வசனப்பகுதிகளுக்கே நீங்கள் செல்ல வேண்டும். ஞானஸ்நானம் பற்றிப் பவுல் போதித்தது என்ன என்பதைக் கண்டறிய, ரோமர் 6:3-7 அல்லது கலாத்தியர் 3:26, 27க்குச் செல்ல வேண்டுமே தவிர, ரோமர் 2:28, 29க்கு அல்ல. இருந்தபோதிலும், ஞானஸ்நானத்தின் மதிப்பைக்குலைக்க வசனங்கள் 28 மற்றும் 29ஐப் பயன்படுத்தும் முயற்சி சிலரால் ஏற்படுத்தப்பட்டுள்ளது.*

*ஏற்கனவே குறிப்பிடப்பட்ட ''எழுத்து எதிர். ஆவி'' என்பது தொடர்பாகச் சிலர் பொதுவான விவாதத்தைப் பயன்படுத்துகின்றனர். அவர்கள், ஞானஸ்நானம் என்பது "வேத எழுத்தின்" பாகமாக உள்ளது, எனவே அது மாபெரும் அக்கறைக்குரியதல்ல என்று வலியுறுத்துகின்றனர். "ஒரு நபரின் ஆவி (இருதயம்) சரியானதாக இருந்தால், அவர் ஞானஸ்நானம் பெற்றுள்ளாரா இல்லையா என்பது சார்பளவில் முக்கியத்துவமற்றதாக உள்ளது'' என்று அவர்கள் முடிவு செய்கின்றனர். பவுல் தமது சிந்தையில் இவ்விதமான முடிவைக் கொண்டிருந்தார் என்பதற்குச் சிறியதொரு குறிப்புக்கூட 28 மற்றும் 29 வசனங்களில் இல்லை என்பதே இந்த விவாதத்தின் பிரச்சனையாக உள்ளது. நாம் காணப்போகிறபடி, ரோமர் 6ல், பவுல் ஞானஸ்நானம் என்பது மனிதருடைய மீட்புக்கான தேவனுடைய திட்டத்தில் வலிவார்ந்த பாகமாக உள்ளது என்று போதித்தார்.*

*மற்றவர்கள் இன்னும் அதிக திட்டவட்டமான விவாதத்தைப் பயன்படுத்தி, விருத்தசேதனத்தையும் ஞானஸ்நானத்தையும் சமானப் படுத்த முயற்சி செய்கின்றனர். அவர்களின் விவாதம் பின்வருவன போன்றுள்ளது:*

- *யூதக்குடும்பத்தில் பிறத்தல் என்பது ஒரு யூத ஆணை யூதனாக்கிற்று. பிற்பாடு எட்டாம் நாளில் விருத்தசேதனம் செய்யப்படுதல், அவர் ஒரு யூதர் என்பதற்கு* அடையாளமாக *(அல்லது முத்திரையாக) மாத்திரமே இருந்தது (ரோமர் 4:11ஐக் காணவும்). ஆகையால், தேவனுடைய பிள்ளையாக இருக்க விருத்தசேதனம் எச்செயலும் செய்யவில்லை.*
- *அதுபோலவே, ''மறுபடியும் பிறந்து'' இருத்தல் (யோவான் 3:3) - இது "விசுவாசத்தினால் மாத்திரமே" நிறைவேற்றப்படுகிறது என்று அவர்கள் கூறுகின்றனர் - என்பது ஒருவரைத் தேவனுடைய பிள்ளையாக்குகிறது. பிற்பாடு ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுதல், அவர் ஏற்கனவே தேவனுடைய பிள்ளையாக இருக்கிறார் என்பதற்கு ஒரு அடையாளமாக அல்லது முத்திரையாக மாத்திரம் உள்ளது. (சிலர், ஞானஸ்நானத்தை "உள்ளான சுத்திகரிப்பின் புறம்பான அடையாளம்'' என்று குறிப்பிடுகின்றனர்.) ஆகையால், ஒருவர் தேவனுடைய பிள்ளையாக இருப்பதற்கு ஞானஸ்நானம் ஒன்றும் செய்வதில்லை என்று அவர்கள்*

உரிமை கோருகின்றனர்.

இந்தச்சமானப்படுத்தும் செயல் பல தவறுகளைக் கொண்டுள்ளது, அவற்றின் சிக்கறுக்க எங்கு தொடங்குவது என்று அறிவதுகூடக் கடினமாக உள்ளது. புதிய பிறப்பு என்பது "விசுவாசத்தினால் மாத்திரம்" ஏற்படுவதாக உள்ளது என்று வேதாகமம் போதிப்பதில்லை. நாம் "ஆவியினாலும் ஜலத்தினாலும் பிறக்க வேண்டும்" என்று இயேசு கூறினார் (யோவான் 3:5). சபையின் தொடக்க நூற்றாண்டுகள் முழுவதிலும், யோவான் 3:5ல் உள்ள "ஜலம்" என்பது தண்ணீர் ஞானஸ்நானத்தைக் குறிப்பிட்டது என்று பொதுவாக ஒப்புக்கொள்ளப்பட்டிருந்தது. பேதுரு தமது வாசகர்களுக்கு, அவர்கள் சத்தியத்திற்குக் *கீழ்ப்படிந்தபோது*, அவர்கள் "மறுபடியும் பிறந்தவர்களாக" இருந்தனர் என்று கூறினார் (1 பேதுரு 1:22, 23). மற்றும், ஞானஸ்நானம் என்பது இரட்சிப்பு குறித்து ஒன்றும் செய்யாமல், ஒரு "முத்திரை" அல்லது "அடையாளமாக" உள்ளது என்று வேதாகமம் ஒருக்காலும் கூறுவதில்லை. மாறாக, இயேசு "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்" என்று கூறினார் (மாற்கு 16:16அ). பேதுரு, "நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்" என்று கூறினார் (நடபடிகள் 2:38).

இருப்பினும், ஞானஸ்நானத்தை விருத்தசேதனத்துடன் சமானப் படுத்தும் முயற்சியின்மீது நாம் கவனம் குவிப்போமாக. ஞானஸ்நானம் மற்றும் விருத்தசேதனம் ஆகியவற்றிற்கு இடையில் இணைவைத் தரவழைக்கும் எந்த முயற்சியும் அபத்தங்களையே விளைவிக்கக் கூடும். யூதர்கள் மாத்திரமே விருத்தசேதனம் செய்யப்பட்டனர்; நாம் யூதர்களுக்கு மாத்திரம் ஞானஸ்நானம் கொடுக்க வேண்டுமா? ஆண்கள் மாத்திரமே விருத்தசேதனம் செய்யப்பட்டனர்; நாம் ஆண்களை மாத்திரம் ஞானஸ்நானப்படுத்த வேண்டுமா? பொதுவாக, சிறுகுழந்தைகளுக்கே விருத்தசேதனம் செய்யப்பட்டது; நாம் சிறுகுழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்க வேண்டுமா? (சிலர் சிறுகுழந்தைகளுக்குத் தாங்கள் "ஞானஸ்நானம்" என்ற பெயரில் ஒன்றைக் கொடுப்பதை நியாயப்படுத்த "விருத்தசேதனம் = ஞானஸ்நானம்" என்ற கருத்தைப் பயன்படுத்த முயற்சி செய்கின்றனர்.)

நான் அறிந்த வரையில், வேதாகமத்தில் ஒரே ஒரு வசனப்பகுதி மாத்திரமே, ஞானஸ்நானத்துடன் தொடர்புள்ள வகையில் விருத்தசேதனத்தின் ஒப்புவமையைப் பயன்படுத்துகிறது. கொலோசெயிலிருந்த சபைக்குப் பவுல் பின்வருமாறு எழுதினார்,

> அல்லாமலும், நீங்கள் கிறிஸ்துவைப்பற்றும் விருத்தசேதனத்தினாலே மாம்சத்துக்குரிய பாவசரீரத்தைக் களைந்துவிட்டதினால், கையால் செய்யப்படாத விருத்தசேதனத்தை அவருக்குள் பெற்றீர்கள். ஞானஸ்நானத்தில் அவரோடுகூட அடக்கம்பண்ணப் பட்டவர்களாகவும், அதிலே அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே

*அவரோடேகூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள். உங்கள் பாவங்களினாலேயும், உங்கள் மாம்ச விருத்தசேதனமில்லாமை யினாலேயும் மரித்தவர்களாயிருந்த உங்களையும் அவரோடேகூட உயிர்ப்பித்து, அக்கிரமங்களெல்லாவற்றையும் உங்களுக்கு மன்னித்து (கொலோசெயர் 2:11-13).*

*இவ்வசனப்பகுதியில், ஞானஸ்நானமும் ஆவிக்குரிய விருத்தசேதனமும் தொடர்புபடுத்தப்படுகின்றன, ஆனால் அவைகள் ஒன்றல்ல. ஞானஸ்நானம் (தண்ணீருக்குள் முழுக்காட்டுதல்) என்பது மனித செயலாக உள்ளது, ஆவிக்குரிய விருத்தசேதனம் என்பது (அக்கிரமங்களுக்கு மன்னிப்பை உள்ளடக்குவது) தெய்வீக செயலாக உள்ளது. ஆவிக்குரிய விருத்தசேதனம் என்பது ஒருவர் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்வதன் விளைவாக நடைபெறுகிறது, இது அவர் ஞானஸ்நானம் பெற்ற கணத்திலேயே நடைபெறுகிறது - ஆனால் இவ்விரு செயல்களும் தனித்தனியானவையாகும்.*

*ஞானஸ்நானம் என்பது, நமது இரட்சிப்பிற்கான ஒரு அடையாளமாகவோ அல்லது முத்திரையாகவோ ஒருக்காலும் குறிப்பிடப்படுவதில்லை, ஆனால் உள்ளாக வாசம்பண்ணும் பரிசுத்த ஆவியானவரே இவ்வாறு குறிப்பிடப்படுகிறார். கொரிந்தியர்களுக்குப் பவுல், தேவன் "நம்மை முத்திரித்து, நம்முடைய இருதயங்களில் ஆவியென்னும் அச்சாரத்தையும் கொடுத்திருக்கிறார்" என்று கூறினார் (2 கொரிந்தியர் 1:22). அவர் எபேசியருக்கு, "வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் அவருக்குள் [கிறிஸ்துவுக்குள்] முத்திரை போடப்பட்டீர்கள். ... ஆவியானவர் நம்முடைய சுதந்தரத்தின் அச்சாரமா யிருக்கிறார்" என்று எழுதினார் (எபேசியர் 1:13, 14). நாம் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டபோது, நமக்குப் பரிசுத்த ஆவியானவரின் "முத்திரை" கொடுக்கப்பட்டது (நடபடிகள் 2:38; 5:32ஐக் காணவும்). ஒரு நபரை யூதராக்குவது எது என்பதையும் ஒரு நபரைக் கிறிஸ்தவராக்குவது எது என்பதையும் இணைவுபடுத்த நான் முயற்சிசெய்தால், அது பின்வருவது போன்று காணப்படும்:*

- *யூதக்குடும்பத்தில் பிறத்தல் என்பது ஒரு யூத ஆணை யூதனாக்கிற்று. விருத்தசேதனம் என்பது, அவர் ஒரு யூதன் என்பதற்கு அடையாளமாக அல்லது முத்திரையாக இருந்தது.*
- *புதிய பிறப்பு (இது தண்ணீருக்குள் ஞானஸ்நானம் பெறுதலை உள்ளடக்குகிறது; யோவான் 3:5) ஒருவரைக் கிறிஸ்தவராக்குகிறது. ஒருவர் மறுபடியும் பிறக்கும்போது, அவருக்குப் பரிசுத்த ஆவியானர் அருளப்படுகிறார் (நடபடிகள் 2:38) இது அவர் ஒரு கிறிஸ்தவராக இருக்கிறார் என்பதற்கு அடையாளமாக அல்லது முத்திரையாக உள்ளது (ரோமர் 8:9ஐக் காணவும்).*

இணைகருத்து பூரணமாயிருப்பதில்லை. விருத்தசேதனம் என்பது யூத ஆண்களுக்கானது என்ற உண்மையுடன் பின்வரும் வேறுபாடும் உள்ளது: சட்டப்படி, மாம்சத்திற்குரிய விருத்தசேதனம் என்பது, மாம்சப்பிரகாரமான பிறந்த எட்டாம் நாளில் நடைபெற்றது, ஆனால் நாம் பிறந்த எட்டாம் நாளில் அல்ல, மறுபடியும் பிறக்கும்போதுதான் நமக்குத் தேவன் பரிசுத்த ஆவியானவரைத் தந்தருளுகிறார். இருந்தபோதிலும், இவ்விரு செயல்முறைகளுக்கும் இடையில் ஒற்றுமைகள் உள்ளன.

வேத வசனப்பகுதி எதைப் போதிப்பதில்லை என்று காண்பதற்கு நாம் இந்தப் பக்கவழியான பயணத்திற்குப் போதிய அளவு நேரம் எடுத்துக்கொண்டுள்ளோம். இது (வேதவசனம்) எதைப் போதிக்கிறது என்பதை நீங்கள் மறந்துபோகும்படி நான் விரும்பமாட்டேன். ஒரு யூதர், "மெய்யான யூதராக" இருப்பதற்கு, அவர் மாம்சத்தில் விருத்தசேதனம் செய்விக்கப்பட்டிருந்தால் மாத்திரம் போதாது; அவர் இருதயத்திலும் விருத்தசேதனம் செய்யப்பட்டிருக்க வேண்டும். அவரது இருதயம் கர்த்தரிடத்தில் நிலைகொண்டிருக்க வேண்டும்; அவர் கர்த்தருக்கென்று தம்மை ஒப்புக்கொடுக்க வேண்டும். அதுபோலவே, "மெய்யான கிறிஸ்தவர்களாக" இருப்பதற்கு நாம் புறம்பாக மாத்திரம் "சரியாக" இருந்தால் போதாது, ஆனால் நாம் உள்ளாகவும் "சரியாக" இருக்க வேண்டும்.

புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவத்தை மீளக்கட்டும் அறைகூவலுக்கென்று என்னை நான் ஒப்புக்கொடுத்துள்ளேன். இந்த மீளக்கட்டுவித்தலின் ஒரு அம்சம் புறம்பானதாக உள்ளது: நாம் "வேதாகமத்தின் செயல்களை வேதாகமத்தின் வழிகளில் செய்வது" அவசியமாக உள்ளது. அதே வேளையில், நான் உள்ளானவற்றைப் புறக்கணிக்கும் அளவுக்குப் புறம்பானவற்றை வலியுறுத்துதலின் அபாயங்களைப் பற்றி அறிந்திருக்கிறேன். ஆவியைப் புதுப்பித்தலைக் காட்டிலும் முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவத்தின் வடிவங்களை மீளக்கட்டுவித்தல் சுலபமாக உள்ளது. இவ்விதமாக, "மெய்யான கிறிஸ்தவராக" இருப்பதற்கு நாம் புறம்பாக "சரியானவர்களாக" இருந்தால் மாத்திரம் போதாது, ஆனால் நாம் உள்ளாகவும் "சரியானவர்களாக" இருக்க வேண்டியது அவசியம் என்று மறுபடியும் கூறுகிறேன்!

## முடிவுரை

பவுலின் நிருபத்தின் இந்தப் பகுதியில் அவரது முற்றான நோக்கம் பற்றிய கண்ணோக்கைத் தவறவிட்டு விடாதீர்கள். அவர் கூறிய ஒவ்வொன்றும், பாவத்தைப் பற்றி யூதர்களுக்கு உணர்த்த - அவர்களுக்கு இயேசு தேவை என்பதை அவர்கள் நம்பி இணங்கவைக்க - ஏதாவது ஒருவகையில் கணக்கிடப்பட்டிருந்தன. யூதர்களுக்குத் தேவனுடைய நீதி தேவை என்பதைப்பற்றி நாம் இன்னொரு பாடத்தைக் கொண்டிருப்போம். ரோமர் 3:1-8ல், பவுல் யூதர்கள் எழுப்பக்கூடிய சில மறுப்புகளுக்குப் பதில் அளித்தார்.

இப்பாடத்தை முடிக்கும் இவ்வேளையில், "மெய்யான யூதர்

*தயவுசெய்து எழுந்து நிற்பாரா?" என்ற கேள்விக்கு நாம் மீண்டும் ஒருமுறை திரும்புவோம் - இவ்வேளையில் நான் இந்தக் கேள்வியை "மெய்யான கிறிஸ்தவர்தயவுசெய்து எழுந்து நிற்பாரா?" என்று மாத்திரம் மாற்ற விரும்புகிறேன். உங்களை அறிந்துள்ள - உங்களின் உள்ளும் புறம்பும் அறிந்துள்ள - மக்கள் கொண்ட பேட்டிகாணும் குழுவின் முன்பாக நீங்கள் அமர்ந்திருந்து, அந்தக் கேள்வி உங்களிடத்தில் கேட்கப்பட்டால், நீங்கள் எழுந்து நிற்பீர்களா? நீங்கள் எழுந்து நிற்கத் துணிவீர்களா? நீங்கள் "ஒரு புறம்பான தேவை" அல்லது "ஒரு உள்ளான தேவை" கொண்டிருந்தால், அதைப்பற்றி இன்றே அக்கறைகொள்ளும்படி நான் உங்களை வேண்டிக்கேட்டுக் கொள்கிறேன்! கிறிஸ்துவினிடத்தில் வாருங்கள் அவரது இரத்தம் உங்களை ஒவ்வொரு பாவத்தில் இருந்தும் சுத்திகரிக்க அனுமதியுங்கள் (கலாத்தியர் 3:26, 27; ரோமர் 6:3-7; கொலோசெயர் 1:14; 1 யோவான் 1:7, 9)!*

---

*குறிப்புகள்*

[1]AB வேதாகமம் "real" *என்ற வார்த்தையை அடைப்புக்குறிகளுக்குள் கொண்டுள்ளது, இது இவ்வார்த்தை கிரேக்க வசனத்தில் இல்லை என்பதையும், இது மறைமுகமாய் இவ்விடத்தில் உணர்த்தப்படுவதாக நினைத்த மொழிபெயர்ப்பாளரால் இவ்விடத்தில் சேர்க்கப்பட்டது என்பதையும் சுட்டிக்காண்பிக்கிறது.* [2]John Fawcett, "The Precious Book Divine," *Songs of Faith and Praise,* comp. and ed. Alton H. Howard (West Monroe, La.: Howard Publishing Co., 1994). *[3]அமெரிக்க நாட்டில், நான் "உங்கள் காபி அருந்தும் மேஜையின்மீது ஒரு வேதாகமத்தைக் கொண்டிருத்தல் மாத்திரம் ..." என்று கூறுவேன்.* [4]*Temno என்ற எளிய வினைச்சொல் புதிய ஏற்பாட்டில் காணப்படுவதில்லை; இவ்வார்த்தை எப்போதுமே ஒரு முன்னிடைச் சொல்லுடன் இணைந்தே காணப்படுகிறது.* (W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* [Nashville: Thomas Nelson Publishers, 1985], 143.) [5]Vine, 102. [6]Douglas J. Moo, *Romans,* The NIV Application Commentary (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 2000), 97. *[7]விருத்தசேதனம் என்பது தொடக்ககால சபையில் ஒரு பிரதான பிரச்சனையாகும் அளவுக்கு யூதர்களுக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. சில யூதக்கிறிஸ்தவர்கள், புறஜாதியார் விருத்தசேதனம் செய்யப்பட வேண்டும் என்று வலியுறுத்தினர் (நடபடிகள் 15:1ஐக் காணவும்).* [8]Quoted in D. Stuart Briscoe, *Mastering the New Testament: Romans*, The Communicator's Commentary Series (Dallas: Word Publishing, 1982), 71. [9]Quoted in John R. W. Stott*, The Message of Romans: God's Good News for the World,* The Bible Speaks Today series (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1994), 92. [10]Quoted in John MacArthur, *Romans 1-8,* The MacArthur New Testament Commentary (Chicago: Moody Press, 1991), 160.

*[11]கிரேக்க வசனத்தில், இங்கு திட்டவட்டச் சுட்டுச்சொல் இல்லை. 25 முதல் 29 வரையுள்ள வசனங்களில், சிலவேளைகளில் "நியாயப்பிரமாணம்" என்பதற்கான வார்த்தைக்கு முன்னதாக திட்டவட்டச் சுட்டுச்சொல் உள்ளது, சிலவேளைகளில் இது இருப்பதில்லை. இருப்பினும், பவுல் மோசேயின் நியாயப்பிரமாணத்தையே சிந்தையில் கொண்டிருந்தார் என்பது பொதுவாக ஒப்புக்கொள்ளப்படுகிறது.* [12]Leon Morris, *The Epistle to the Romans* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1988), 140, n. 151. [13]Vine, 340. [14]Morris, 140. [15]Vine, 133. [16]Stott, 93. *[17]"சுபாவத்தின்*

*படி" என்பதற்கு கிரேக்க மொழியில் ek phuseos ("இயல்பின்படி") என்ற வார்த்தை உள்ளது. விருத்தசேதனமில்லாத புறஜாதியார்கள் தங்கள் "சுபாவமான" (தாங்கள் பிறந்த மாம்சப்பிரகாகமான) நிலையில் இருந்தனர்.* [18]Adapted from Morris, 141. *[19]"வேத எழுத்து" என்பது, "எழுதப்பட்டது" என்று அர்த்தம்தரும் (grammatos என்ற) தனித்த கிரேக்க வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது* (*The Analytical Greek Lexicon* [London: Samuel Bagster & Sons, 1971], 82). NIV, RSV, *மற்றும்* NKJV *ஆகிய வேதாகமப் பதிப்புகளில்* "written code" *என்றுள்ளது. இவ்வசனத்தின் இவ்வார்த்தை மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் குறிக்கிறது என்பதைச் சந்தர்ப்பப்பொருள் சுட்டிக்காண்பிக்கிறது.* [20]J. W. McGarvey and Philip Y. Pendleton, *Thessalonians, Corinthians, Galatians and Romans* (Cincinnati: Standard Publishing, n.d.), 316.

[21]Moses E. Lard, *Commentary on Paul's Letter to Romans* (Lexington, Ky.: N.p., 1875; reprint, Delight, Ark.: Gospel Light Publishing Co., n.d.), 97. *[22]இவ்விடத்தில், "மாம்சம்" என்ற வார்த்தை "சரீரரீதியாக" மாத்திரமே அர்த்தப்படுகிறது; ஆனால் ரோமருக்கு எழுதிய நிருபத்தில் இவ்வார்த்தை, இப்புத்தகத்தொடரில் பிற்பாடு நாம் காணப்போகிற வார்த்தை பற்றிய சுருக்கமான படிப்பில் உள்ளபடி, பல்வேறு வழிகளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. [23]ரோமர் 2:16ல் krupto என்பதன் பன்மைப்பதம் ஒன்று "அந்தரங்கங்கள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. [24]Pneuma என்பது பல்வேறு வகையான அர்த்தங்களைக் கொண்டிருக்க முடியும், ஆனால் இவ்விடத்தில் இவ்வார்த்தை "ஆவி"யைக் குறிக்கிறது. பிந்திய ஒரு பாடத்தில், நாம் இவ்வார்த்தையைப் பற்றி பெரிய அளவில் கலந்துரையாடுவோம். [25]ரோமருக்கு எழுதிய நிருபத்தில் பிற்பாடு (குறிப்பாக 8ம் அதிகாரத்தில்), பவுல் கிறிஸ்தவர்களின் வாழ்வில் பரிசுத்த ஆவியானவரின் கிரியைப் பற்றிப் பேசினார்; ஆனால் 2ம் அதிகாரத்தில் அவர், யூதர்களின் இருதயங்களில் தேவனுடைய கிரியைப் பற்றிப் பேசினார்.* [26]Morris, 142. *[27]இன்றைய நாட்களில் சபையே "ஆவிக்குரிய இஸ்ரவேலாக" உள்ளது என்று பல வசனப்பகுதிகள் காண்பிக்கின்றன. 1 கொரிந் தியர் 10:1ல், பவுல் புறஜாதியாரின் சபையொன்றுக்கு, வனாந்தரத்தில் இருந்த யூதர்களைப் பற்றியெழுதினார், அதில் அவர்களை அவர் "நமது பிதாக்கள்" என்று அழைத்தார்.*